047

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முகாமைத்துவ கற்கைநெறி பீடம்

முகாமைத்துவ கற்கைகள் சிறப்புமாணிப்பட்டம்
கணக்கியல் மற்றும் நிதியியல் - முகாமைத்துவ கற்கைகள் சிறப்புமாணிப்பட்டம்
மனிதவள முகாமைத்துவ -சிறப்பு இளங்கலை பட்ட படிப்பு
சந்தைப்படுத்தல் - முகாமைத்துவ கற்கைகள் சிறப்புமாணிப்பட்டம்

AFU3572 - நுண்பாகப் பொருளியல்
தொடர் மதிப்பீட்டு பரீட்சை – 2023 / 2024
நேரம் - இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி: 23.03.2024 நேரம்: மு.ப 9.30- மு.ப 11.30

சுட்டெண் இல:..................................

## விடைத்தாள் (பல்தேர்வு வினாக்கள்)

கொடுக்கப்பட்ட நான்கு பதில்களில், சரியான விடையின் எண்ணை விடைத்தாளில் தொடர்புடைய வினா எண்ணுக்கு எதிராக எழுதவும். கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட விடை எண்களை எழுதுவதற்கு மதிப்பெண்கள் வழங்கப்பட மாட்டாது.

| வினா எண் | விடை எண் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

| வினா எண் | விடை எண் |
|---|---|
| 11. | |
| 12. | |
| 13. | |
| 14. | |
| 15. | |
| 16. | |
| 17. | |
| 18. | |
| 19 | |
| 20 | |

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**முகாமைத்துவ கற்கைநெறி பீடம்**

**முகாமைத்துவ கற்கைகள் சிறப்புமாணிப்பட்டம்**
**கணக்கியல் மற்றும் நிதியியல் - முகாமைத்துவ கற்கைகள் சிறப்புமாணிப்பட்டம்**
**மனிதவள முகாமைத்துவ -சிறப்பு இளங்கலை பட்ட படிப்பு**
**சந்தைப்படுத்தல் - முகாமைத்துவ கற்கைகள் சிறப்புமாணிப்பட்டம்**

**AFU3572 - நுண்பாகப் பொருளியல்**
**தொடர் மதிப்பீட்டு பரீட்சை – 2023 / 2024**
**நேரம் – இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**திகதி: 23.03.2024** **நேரம்: மு.ப 9.30 - மு.ப 11.30**

**இந்த வினாத்தாளில் பகுதி -I (பல்தேர்வு வினாக்கள்) மற்றும் பகுதி - II (கட்டுரை வினாக்கள்) உள்ளன. பகுதி -I (பல்தேர்வு வினாக்கள்) மற்றும் பகுதி - II (கட்டுரை வினாக்கள்) உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக**

*நிழற்படுத்தப்படாத கணிப்பான்களின் பயன்பாடு அனுமதிக்கப்படுகிறது.*

**அறிவுறுத்தல்கள்:**

- பகுதி I, 40 **புள்ளி**களைக் கொண்ட 20 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.
  **(2 புள்ளிகள் x 20)**
- வினாத்தாளின் பகுதி I இல் உள்ள பல்தேர்வு வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள நான்கு தேர்வுகளில், சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து, கொடுக்கப்பட்டுள்ள தனித்தாளில் பதிலளிக்க வேண்டும்.
- பகுதி - II (கட்டுரை வினாக்கள்) உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக
- உங்கள் சுட்டெண்ணை விடைத்தாளின் மேல் கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதவும்.
- இவ் வினாத்தாள் 6 தட்டச்சு செய்யப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.
- விடைத்தாளை உங்கள் விடை புத்தகத்துடன் இணைக்கவும்.

## பகுதி I

1) பின்வருவனவற்றில் நுண்பாகப் பொருளியலில் **உள்ளடங்காதது** எது?
   i) நிறுவனங்களின் விலை மற்றும் வெளியீட்டு மட்ட தீர்மானங்கள்.
   ii) பொருளாதாரத்தில் சராசரி விலை மட்டத்தின் நடத்தை.
   iii) ஒரு பொருளின் மீது அதிகபட்ச சட்ட விலையை விதிப்பதன் மூலம் ஏற்படும் தாக்கம்.
   iv) நுகர்வோர் வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தினால் ஆடம்பரப் பொருட்களின் கேள்வியில் ஏற்படும் தாக்கம்

2) கொடுக்கப்பட்ட செயல்பாடுகளில் அமையச் செலவு உள்ளடக்குவது,
   i) கைவிடப்பட்ட வருமானம் மட்டும்.
   ii) கைவிடப்பட்ட வருமானம் அல்லது பணச் செலவு (Monetary Cost).
   iii) பணச் செலவு மட்டும்.
   iv) கைவிடப்பட்ட வருமானம் மற்றும் பணச் செலவு இரண்டும்

3) பின்வருவனவற்றில் எது இலவசப் பண்டங்களின் அம்சம்(கள்)?

*a.* அருமையற்றது
*b.* அருமையானது
*c.* அமையச்செலவு உள்ளது
*d.* பூச்சிய அமையச்செலவு

i) "a" மற்றும் "d" மட்டும்,
ii) "b" மற்றும் "c" மட்டும்,
iii) "c" மற்றும் "d" மட்டும்,
iv) "b" மற்றும் "d" மட்டும்.

4) பின்வருவனவற்றுள் எது உற்பத்தி சாத்திய வளையி பகுப்பாய்வு தொடர்பான எடுகோள்களில் **உள்ளடக்கப்படாதது?**

i) குறிப்பிட்ட காலப்பகுதியில் பொருளாதாரத்தின் வளங்கள் வரையறுக்கப்பட்டவை.
ii) தரப்பட்ட இரண்டு பொருட்களை உற்பத்தி செய்ய வளங்களை எந்த வகையிலும் இணைக்கலாம்.
iii) எந்தவொரு பொருளையும் வினைத்திறனாக உற்பத்தி செய்வதற்கு தேவையான வளங்கள் சமனான காணப்படுகின்றன.
iv) குறிப்பிட்ட காலப்பகுதியில் காணப்பட்ட தொழில்நுட்பம் நிலையானது.

5) உற்பத்தி சாத்திய வளையியினுள் காணப்படுகின்ற எந்தப் புள்ளியினாலும் காட்டப்படுவது;

i) வளங்களின் அருமைத்தன்மை.
ii) வளங்களின் வினைத்திறனற்ற ஒதுக்கீடு.
iii) சாத்தியமற்ற உற்பத்தி மட்டம்.
iv) வளங்களின் வினைத்திறனான ஒதுக்கீடு.

6) பின்வருவனவற்றில் எது முதலாளித்துவ/ திறந்த பொருளாதார சந்தையின் பண்புகள் **அல்லாதது**?

i) மையப்படுத்தப்பட்ட திட்டமிடல்.
ii) விலை தொழிட்பாட்டினூடான வளங்களின் வினைத்திறனான ஒதுக்கீடு.
iii) உற்பத்தி காரணிகளின் தனிநபர் உரிமை.
iv) இலாப நோக்கத்துடன் பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்வது.

7) பின்வருவனவற்றில் எது "நெறிமுறை (Normative)" கூற்று?

i) ஒரு நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் அரசாங்கத்தால் அடிப்படை சுகாதார வசதிகள் வழங்கப்பட வேண்டும்.
ii) வரி அதிகரிப்பு மக்களின் நுகர்வுச் செலவைக் குறைக்கிறது.
iii) எரிபொருளுக்கான கேள்வி எரிபொருளின் விலையுடன் எதிர்மறை தொடர்புடையது.
iv) மக்களின் எல்லையற்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய, பொருளாதாரங்கள் வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டுள்ளன.

8) மக்களின் உண்மையான வருமானத்தின் அதிகரிப்பு பொதுப் போக்குவரத்திற்கான கேள்வியைக் குறைத்துள்ளது, எனவே பொதுப் போக்குவரத்து என்பது;

i) சாதாரண பண்டம்
ii) அத்தியாவசிய பண்டம்,
iii) இழிவு பண்டம்
iv) பொது பண்டம்

9) பண்டம் X இன் நுகர்வோர் கேள்வி வளையி வரையப்படும் போது பின்வருவனவற்றில் எது மாறாது?

a) X இன் பதிலீடு பண்டத்தின் விலை
b) நுகர்வோர் வருமானம்
c) பண்டம் X இன் விலை
d) பண்டம் X இன் இணைப்பு பண்டங்களின் விலை

i) "c" மட்டும்,
ii) "a" மற்றும் "b" மட்டும்,
iii) "a" மற்றும் "c" மட்டும்,
iv) "a", "b" மற்றும் "d".

10) X மற்றும் Y பண்டத்தின் குறுக்கு விலை கேள்வி நெகிழ்ச்சியானது நேரான தொடர்பை கொண்டிருக்குமாயின் பண்டம் X இன் விலை அதிகரிப்பானது,

i) Y க்கான கேள்வி குறைகிறது.
ii) Y க்கான கேள்வி அதிகரிக்கும்
iii) Y இன் கேள்விஅளவைக் குறைக்கவும்.
iv) Y இன் கேள்விஅளவைக் அதிகரிக்கும்.

11) பால் மாவின் விலை எதிர்வரும் காலத்தில் உயரும் என எதிர்பார்க்கப்படும் போது;

i) பால் மாவுக்கான தற்போதைய கேள்வி மற்றும் தற்போதைய நிரம்பல் இரண்டும் குறையும்
ii) பால் மாவுக்கான தற்போதைய கேள்வி மற்றும் நிரம்பலில் எந்த மாற்றமும் இருக்காது.
iii) பால் மாவுக்கான தற்போதைய கேள்வி குறையும் மற்றும் பால் மாவின் தற்போதைய நிரம்பல் அதிகரிக்கும்.
iv) பால் மாவுக்கான தற்போதைய கேள்வி அதிகரிக்கும் மற்றும் பால் மாவின் தற்போதைய நிரம்பல் குறையும்.

12) ஒரு பொருளின் விலை குறையும்போது ஏனைய காரணிகள் மாறாது இருக்கும் என கருத்தில் கொண்டு கேள்வி விதியினால் குறிப்பிடப்படுவது?

i) தரப்பட்ட பண்டத்தின் கேள்வி அளவு குறையும்.
ii) தரப்பட்ட பண்டத்தின் கேள்வி அதிகரிக்கும்
iii) தரப்பட்ட பண்டத்தின் கேள்வி அளவு அதிகரிக்கிறது.
iv) தரப்பட்ட பண்டத்தின் கேள்வி குறையும்

13) முட்டை மற்றும் வெண்ணெயின்(Margarin) விலை அதிகரிக்கும் போது,

i) கேக்குகளின் நிரம்பல் வளையி வலது பக்கம் நகரும்.
ii) கேக்குகளுக்கான கேள்வி வளையி இடதுபுறமாக நகரும்.
iii) கேக்குகளின் நிரம்பல் வளையி இடதுபுறமாக நகரும்.
iv) கேக்குகளுக்கான கேள்வி வளையி வலது பக்கம் நகரும்.

14) பண்டம் "X" இன் நிரம்பல் சமன்பாடு $Q_s = -96 + 12P$; என வழங்கப்படுகிறது (Q – தொகை மற்றும் P – விலை); உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு அலகிற்கும் ரூ.3/= மானியமாக வழங்கப்பட்டால், மானியத்திற்குப் பிறகு நிரம்பல் சமன்பாடு;

i) -60+12P,
ii) -93+12P,
iii) -96+9P,
iv) -132+ 12P

15) பண்டம் X இன் நிரம்பலின் மீது அலகுனாக வரி விதிக்கப்படும் போது,
  i) X இன் சமநிலை விலை மற்றும் தொகை இரண்டும் குறையும்.
  ii) பண்டம் X இன் சமநிலை விலை மாறாது இருக்கும் மற்றும் சமநிலை தொகை அதிகரிக்கும்.
  iii) பண்டம் X இன் சமநிலை விலை மற்றும் தொகை இரண்டும் அதிகரிக்கும்.
  iv) X இன் சமநிலை விலை அதிகரிக்கிறது மற்றும் சமநிலை தொகை குறையும்.

16) ஒரு கிலோ அரிசிக்கு அரசாங்கம் அதிகபட்ச சட்ட விலையை சமநிலை விலைக்கு குறைவாக விதிக்கும் போது;
  a) சந்தையில் அரிசிக்கான மிகை உருவாக்குகிறது,
  b) சந்தையில் அரிசிக்கான பற்றாக்குறை உருவாக்குகிறது.
  c) உள்ளூர் அரிசி உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்,
  d) அரிசிக்கான கறுப்புச் சந்தை உருவாகும்.

  i) "a" மற்றும் "c" மட்டும் சரியானவை
  ii) "b" மற்றும் "d" மட்டும் சரியானது,
  iii) "b", "c" மற்றும் "d" மட்டும் சரியானவை.
  iv) "d" மட்டும் சரியானது.

17) பண்டம் X இலிருந்து கிடைக்கப்பெறும் மொத்த வருமானம் குறைவடையும் சந்தர்ப்பமானது,
  i) X க்கான கேள்வி நெகிழ்ச்சியுள்ளது மற்றும் X இன் விலை அதிகரிக்கிறது.
  ii) X க்கான கேள்வி நெகிழ்ச்சியற்றது மற்றும் X இன் விலை அதிகரிக்கிறது.
  iii) X க்கான கேள்வி நெகிழ்ச்சியுள்ளது மற்றும் X இன் விலை குறைகிறது.
  iv) X க்கான கேள்வி ஒன்றுக்கு சமனான விலைகேள்வி நெகிழ்ச்சி மற்றும் X இன் விலை அதிகரிக்கிறது.

18) நுகர்வோர் தங்கள் வருமானத்தில் மிகப் பெரிய சதவீதத்தை ஒரு பண்டத்திற்காகச் செலவிடும்போது, அந்தப் பண்டத்தின் விலை கேள்வி நெகிழ்ச்சியாக இருப்பது;
  i) நிறைந்த நெகிழ்ச்சியுள்ளது (Perfectly elastic)
  ii) முற்றிலும் நெகிழ்வற்றது (Perfectly inelastic demand)
  iii) அதிக நெகிழ்வற்ற தன்மை (Highly inelastic)
  iv) அதிக நெகிழ்ச்சியுள்ள தன்மை (Highly elastic)

19) பண்டம் X க்கான வருமான கேள்வி நெகிழ்ச்சித்தன்மை "+ 0.48" என தரப்படுமாயின், பண்டம் X ஆனது;
  i) இழிவு பண்டம் (inferior good)
  ii) அத்தியாவசிய பண்டம் (necessity good)
  iii) ஆடம்பர பண்டம் (luxury good)
  iv) கிஃபன் பண்டம் (Giffen goods)

20) ஒரு நிறைந்த கேள்வி நெகிழ்ச்சியுள்ள வளைவைக் கொண்ட ஒரு பொருளின் மீது நிரம்பல் வரி விதிக்கப்படும் போது;
  i) முழு வரித் தொகையும் விற்பனையாளர்களால் சுமக்கப்படுகிறது, மேலும் சமநிலை தொகை குறைகிறது.
  ii) முழு வரித் தொகையும் கொள்வனவாளர்களினால் சுமக்கப்படுகிறது மற்றும் சமநிலை தொகை குறைகிறது.
  iii) வரித் தொகை கொள்வனவாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.
  iv) முழு வரித் தொகையும் விற்பனையாளர்களால் ஏற்கப்படுகிறது, மேலும் சமநிலை தொகை அதிகரிக்கிறது.

## பகுதி II

***அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்குக.***

***அனைத்து வினாக்களும் சமமான புள்ளிகளை கொண்டுள்ளன (ஒவ்வொன்றும் 30 புள்ளிகள்)***

**வினா இல 01.**

A. a. *"சில பொருட்களுக்கு நேர் படித்திறன் கொண்ட கேள்வி வளையி இருப்பது சாத்தியம்" நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்கவும்.*

**(05 புள்ளிகள்)**

b. *பின்வரும் மாற்றங்கள் அந்தந்த சந்தைகளை எவ்வாறு பாதிக்கும்? உதாரணங்களை பயன்படுத்தி விளக்கவும்.*

i. *நீடித்த வறட்சியால் தென்பகுதியில் வாழை அறுவடை அழிந்துள்ளது, வாழைக்கான சந்தை.*

ii. *அதிகளவிலான மக்கள் இயற்கை விவசாயதினுள் நுழைந்துள்ளனர், கனிம உரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளுக்கான சந்தை.*

iii. *பதப்படுத்தப்பட்ட இறைச்சியை உட்கொள்வது மனித ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்று மருத்துவ அறிக்கை கூறுகிறது, பதப்படுத்தப்பட்ட இறைச்சிக்கான சந்தை.*

iv. *தொழில்நுட்ப முன்னேற்றம் நெல் விவசாயத்தில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளைக் குறைத்துள்ளது, அரிசிக்கான சந்தை.*

**(12 புள்ளிகள்)**

B. *பண்டம் X க்கான கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன;*

$Qd = 112 - 4P$ *மற்றும்* $Qs = -80 + 8P$; ($Q$ = *தொகை*, $P$ = *விலை*).

*உங்கள் விடைகளை விளக்க தேவையான உதாரணங்களை வழங்கவும்.*

i. *சமநிலைப் புள்ளியில் விலை மற்றும் தொகையை கண்டறியவும்.*

**(03 புள்ளிகள்)**

ii. *அரசு குறைந்தபட்ச சட்ட விலையாக X பண்டத்திற்கு ரூ. 20/= இனை விதித்தால், X க்கான சந்தையில் எவ்வாறு மாற்றம் ஏற்படும்? குறைந்தபட்ச சட்ட விலையை விதிப்பதன் பொருளாதார விளைவுகள் என்னவாக இருக்கும்? விளக்குக.*

**(07 புள்ளிகள்)**

iii. *சந்தையில் X பண்டத்திற்கு 10,000 ஒரே மாதிரியான நுகர்வோர் மற்றும் 1000 ஒரே மாதிரியான உற்பத்தியாளர்கள் இருந்தால், X பண்டத்தின் சந்தை கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகளைப் பெறுங்கள்.*

**(03 புள்ளிகள்)**

**வினா இல 02.**

A. i. *"நிரம்பல் விலை நெகிழ்ச்சி" என்பதன் பொருள் என்ன? உதாரணங்களுடன் விளக்கவும்.*

**(03 புள்ளிகள்)**

ii. *நிரம்பல் விலை நெகிழ்ச்சியை தீர்மானிக்கும் காரணிகள் எவை? விளக்கவும்.*

**(05 புள்ளிகள்)**

iii. *ஒரு பொருளின் நிரம்பல் சமன்பாடு* Qs = -56 +8P *என வழங்கப்படுகிறது* (P = *ரூபாயில்,* Qs *அலகுகளில்). கொடுக்கப்பட்ட பொருளின் விலை* 12/- *என தரப்படின்; நிரம்பலின் விலை நெகிழ்ச்சியை கணக்கிடுங்கள். மற்றும் நெகிழ்ச்சி குணகம் பற்றிய கருத்து என்ன?*

**(06 புள்ளிகள்)**

B. *பின்வரும் கூற்றுகளை நீங்கள் "ஒப்புக்கொள்கிறீர்களா" என்பதை விளக்குங்கள்.*

i. *ஒரு பொருளின் உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதால், அதன் நிரம்பல் விலை நெகிழ்ச்சி அதிகமாகும்.*

ii. *நீண்ட காலத்தில் ஒரு பொருளின் நிரம்பல் நெகிழ்ச்சியானது அதிகமாக காணப்படும்*

**(08 புள்ளிகள்)**

C. *பின்வரும் சந்தர்ப்பங்களில் நுகர்வோர் சமநிலை எவ்வாறு விளக்கப்படும்;*i. *அளவிடத்தகுப் பயன்பாடு (*cardinal utility), ii. *எண்ணளவுப் பயன்பாடு* (Ordinal utility) *என்பவற்றை உதாரணத்தினை பயன்படுத்தி விளக்குக.*

**(08 புள்ளிகள்)**

*-பதிப்புரிமையுடையது-*